REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✲ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: பங்குனி 20உ சனி (2—4—55) ★ ★ வெளியூர்: பங்குனி 21உ ஞாயிறு (3—4—55) [இதழ் 249

ஈடன் இங்கிலாந்து பிரதமராகிறார்

லண்டன், ஏப்ரல் 1—

பிரிட்டனின் தற்போதைய பிரதமராயிருந்துவரும் சர். வின்ஸ்டன் சர்ச்சில், இத்திங்கள் 5-ந் தேதியன்று தமது பிரதமர் பதவியைத் துறந்துவிடுவாரெனவும், அடுத்தபடியாக பிரிட்டிஷ் வெளிநாட்டிலாகா அமைச்சரான சர். அந்தோனி ஈடன் பிரதமராக நியமனம் பெறுவார் எனவும் கூறப்படுகிறது.

ஈடன் பிரதமரானதும், காலியான அவரது பதவிக்கு ஹெரோல்ட் மாக்மில்லன் என்பவர் நியமிக்கப்படலாமென்றும் தெரிகிறது. ஈடன் பிரதமரானதும், பொதுத் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை, மே திங்கள் 26-ந் தேதியன்று வெளியிடுவாரெனவும் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

'செய்திப் படமா?-காங். கட்சி விளம்பரமா?'

ஓடிவரும் 'அகதி'கள் எண்ணிக்கை

தினந்தோறும் வளர்ந்துகொண்டே செல்கிறதாம்

கிழக்கு வங்கத்திலிருந்து கல்கத்தாவிற்கு ஓடிவரும் 'அகதி'களின் எண்ணிக்கை வளர்ந்துகொண்டே வருவதாகக் கூறப்படுகிறது.

கடந்த பிப்ரவரியில் 442 பேர்களைக் கொண்ட 107 குடும்பங்கள் சராசரியாகத் தினந்தோறும் ஓடிவந்துகொண்டிருந்தனவாம்.

ஆனால் மார்ச் மாதத்தில், 450 பேர்களைக் கொண்ட 126 குடும்பங்கள் சராசரியாகத் தினந்தோறும் ஓடிவந்திருக்கின்றனர் என்ற புள்ளி விவரங்கள் வெளியாகியுள்ளன.

அரிசனங்களுக்கு

'நேரு வீடுகள்!'

சென்னை நகர அபிவிருத்தி டிரஸ்ட், பேசின்பிரிட்ஜ் அருகில் உள்ள பகுதியில், சுமார் 50 'நேரு மாதிரி வீடு'கள், அரிசனக் குடும்பங்களுக்காகக் கட்டத் திட்டமிட்டுள்ளது என்று தெரியவருகிறது.

குறைந்த வருமானமுடைய மக்களுக்கு எவ்வளவு பரப்புள்ள இடம் போதுமென பண்டித நேரு குறிப்பிட்டிருந்தாரோ அந்த பரப்பளவுடன் கூடியதாக வீடுகள் அமைக்கப்பட விருப்பதால் 'நேரு வீடுகள்' என்று அவை அழைக்கப்படுகின்றனவாம்.

5 வீடுகள் கொண்டுள்ள ஒரு பகுதியை, குளிக்கும் அறை முதலிய வசதிகளுடன் அமைக்க ரூ. 3,750 மட்டுமே செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதாம்.

வீடு ஒன்றுக்கு மாதக் குடிக்கூலியாக ரூ. 3—8—0 மட்டுமே தரவேண்டியிருக்குமென்றும், இந்த வீடுகள் குடிசைகளிலும், நடைபாதைகளிலும் வதியும் மக்களுக்காகவென்று கட்டப்படுவதாயும் கூறப்படுகிறது.

'காங்கிரஸ் மாநாட்டை விளம்பரப்படுத்துகிறீரே'

'ஆயிரமாயிரம் மக்கள் கூடும் தி. மு. கழகமாநாட்டை புறக்கணிப்பதேன்'

'மாநாட்டை வந்து பாரீர்! உண்மை உணர்வீர்!'

கனம் சுப்ரமணியத்திற்கு டி. சண்முகம் அன்பழைப்பு

"அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட செய்திப் படங்கள் எனச் சொல்லப்படும் பேசும் நிழல் படங்கள் அனைத்தும், காங்கிரஸ் கட்சியின் பிரசாரப் படங்களாகவே இருந்து வருகின்றன; காங்கிரசிற்கு ஆதரவு தேடுவதையே அப்படங்கள் பெரிதும் நோக்கமாகக் கொண்டுள்ளன;

"காங்கிரஸ் மாநாட்டின் காட்சிகள் பலவும் அந்தப் படங்கள் மூலம் விளம்பரப்படுத்தப்படுகின்ற அதே நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தால் நடத்தப்பெறும் பெரும் மாநாடுகளும், மற்றக் கட்சியினர் நடத்தும் மாநாடுகளும் அலட்சியப்படுத்தப்படுகின்றன;

"அடுத்த திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டை வந்து காணும்படி நான் சட்ட அமைச்சரை (கனம் சுப்பிரமணியம்) அன்புடன் அழைக்கிறேன்; நான் இங்கு கூறுவதின் உண்மையை, நேரில் கண்டு அவரே அறிந்துகொள்ளட்டும்;

"தி. மு. கழக மாநாட்டை அமைச்சரவர்கள் கண்டால் அவரே அந்தக் காட்சிகளைப் படமாக்குமாறு உத்திரவிடுவார்,"

என்று தோழர் டி. சண்முகம் எம். எல். ஏ., அவர்கள் சட்டசபையில் செய்திச் சினிமாப் படங்களைக் கட்டாயமாகக் காட்டுமாறு கோரும் மசோதா மீது நடைபெற்ற விவாதத்தின்போது குறிப்பிட்டார்.

"'சொர்க்க வாசல்' படத்தில், 'ஆஸ்தீகம் எது? நாஸ்தீகம் எது?' என்று வந்த பாடலையே சென்சார் போர்டார் கத்தரித்து விட்டார்கள்; 'ஆஸ்தீகம் எது? நாஸ்தீகம் எது'? என்பதை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா? சென்சார் போர்டு கத்தரித்துவிட்டதிலுலேயே அந்தப் பாடலை, மக்கள் கேட்காமல் செய்துவிட அவர்க

(4-ம் பக்கம் பார்க்க)

அவசரச் சட்டத்தின் மூலம் அரசியல் சட்டம் உருவாகும்?

இத்திங்கள் மத்தியில் பாகிஸ்தான் கவர்னர்—ஜெனரல் பிறப்பிக்கவிருக்கும் அவசரச் சட்டத்தின் மூலம், பாகிஸ்தானின் புதிய அரசியல் சட்டம்கொண்டு வரப்படலாம் என்று கூறப்படுகிறது.

4 குழந்தைகள் கொலை எதிரொலி

சந்தேகத்தின்பேரில் தாய் கைது

கோவை, ஏப். 1—

கோவையை அடுத்தகிராமம்ஒன்றில் நான்கு குழந்தைகள் கோரமாகக் கொலையுண்ட செய்தி நேற்று வெளிவந்தது. இன்று, அந்தக் குழந்தைகளின் தாயாரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று தெரியவருகிறது.

கொலை செய்த இருவர்களால் பிடுங்கிச் செல்லப்பட்டது என்று, முன்பு அந்தத் தாய் கூறிய ஒரு நகை, குழந்தைகள் கொலையுண்டு மிதந்து கிடந்த கிணற்றிலேயே போலீசாரால் கண்டெடுக்கப்பட்டதாம்.

நில நடுக்க எதிரொலி

200 பேர் பலி; 1,500 பேருக்குக் காயம்

பல்லாயிரவர் வீடிழந்தனர்

பிலிப்பைன்ஸ் தீவுகளில் ஒன்றான வடக்கு மிண்டானேவில் கடுமையான நில நடுக்கம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

இந்த நில நடுக்கத்தின் விளைவாக 200 பேருக்கு மேல் கொல்லப்பட்டுவிட்டனர் என்றும் 1,500 பேருக்கு மேல் காயம்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இப்போது அத்தீவில் உள்ள நான்கு மாகாணங்களிலும் 'நெருக்கடி நிலை' பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறதாம்.

இதுதவிர, மேலும் கிடைத்துள்ள தகவல்கள்படி, பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் தங்கள் வீடுகள் பாழாக்கப்பட்டு வீடின்றித் தவிக்கின்றனர் என்றும், ஒஜாமிஸ் எனும் நகரில் உள்ள ஒரு கிறித்துவக் கோயில் அடியோடு விழுந்து தரைமட்டமாக்கப்பட்டு விட்டது என்றும், அங்குள்ள துறைமுகப் பிரதேசம் முழுமையும் 4 அடி ஆழத்துக்குக் கீழே தணிந்துவிட்டது என்றும் தெரியவருகிறது.

'அபு குன்று இராஜஸ்தானுடன் இணைக்கப்பட வேண்டும்'

வெற்றி கிட்டுகிறவரையில் 'முடி' வளர்ப்பதென சிலர் உறுதி!

அபு குன்று, பம்பாய் மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டு இராஜஸ்தானுடன் இணைக்கப்படும் வரையில் முக க்ஷவரம் செய்து கொள்வதோ, தலைவாரிக்கொள்வதோ இல்லை என்று, அபு குன்றைச் சேர்ந்த சிலர் முடிவெடுத்துள்ளனராம்.

இவர்களில் ஐவர், அபு குன்றை இராஜஸ்தானுடன் இணைக்க வேண்டும் என்று கோரும் ஒரு இயக்கத்தின் செயற்குழுவினராம்.

இவர்கள், நீண்டு வளர்த்த தாடி மீசையுடன் கடந்த மார்ச் 31-ந் தேதியன்று அகமதாபாத் நகரில் மாநில புனரமைப்புக் குழுவினரைச் சந்தித்து தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர் என்று தெரியவருகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★-★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்: அறிக்கை—7/55

நெல்லை நகர தி. மு. க. கிளைச் செயற் குழு கலைக்கப்படுகிறது

நெல்லை நகர தி. மு. க. கிளைச் செயற் குழுவின் தேர்தல் முறைப்படி நடக்கவில்லை என்று தேர்தல் ஆணையாளர் தெரிவிக்கும் காரணத்தாலும், அதனை முறைப்படி நடத்தப் போதுமான காலம் தலைமைக் கழகத்துக்குத் தேவைப்படும் காரணத்தாலும் நெல்லை நகரச் செயற் குழுவை தலைமைக் கழகம் காலவரையறையின்றி கலைக்கிறது.

புதிய மாவட்டக் கிளையும், புதிய பொதுக் குழுவும் உருவான பிறகு நெல்லை நகரச் செயற் குழுத் தேர்தல் கவனிக்கப்படும்.

10—4—55-ல் நடைபெறப்போகும் மாவட்டத் தேர்தலுக்குப் பிரதிநிதிகளை அனுப்பிவைக்கும் உரிமையை இதன்மூலம் நெல்லை நகரக் கிளை இழக்கிறது.

புதிய நெல்லை நகரச் செயற் குழு உருவாகிற வரையில் நகரக் கிளையின் முழுப் பொறுப்பையும் நெல்லை மாவட்டக் கிளை ஏற்று நடத்தும்.

"அறிவகம்", சென்னை
1—4—'55

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★-★★★★★★★★★★★★★★★★★★★★

எவரெஸ்டை எட்டியவர் எவர்?

"எவரஸ்ட் சிகரத்தை ஷெர்பா நார்கே டென்சிங்குடன் எட்டிப் பிடிப்பதற்கு எட்மண்டு ஹிலாரியின் மூளைதான் பயன்பட்டது," என்று, எவரஸ்ட் மலையேறிய பிரிட்டிஷ் குழுவின் உறுப்பினருள் ஒருவரான டாக்டர் எல். ஜி. பக் என்பவர் கூறியிருக்கிறார்.

எவரஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடிப்பதற்கான இறுதி முயற்சி செய்வதற்கான எண்ணம் டென்சிங்கிற்கு ஏற்படவில்லை என்றும், ஹிலாரிதான் அவரை உடன் அழைத்துச் சென்றார் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

"ஹிலாரியும், டென்சிங்கும் உச்சியை அடைய முடிந்ததற்கு அவர்களிடமிருந்த பிராணவாயு சாதனங்களேயாகும்; அந்தச் சாதனத்தை உபயோகிக்க அறிவுத் திறன் மிகுதியாக வேண்டும்; டென்சிங்கிற்கு அந்தத் திறன் இல்லை; இறுதி முயற்சியின்போது, டென்சிங்கிற்காக ஹிலாரிதான் அந்த சாதனத்தை இயக்கினார்,"

என்றும் டாக்டர் பக் கூறினார்.

நிருபர்களிடை பேசிய அவர் மேலும் "'யார் எவரஸ்டைஎட்டிப் பிடித்தார்கள்,' என்ற வாக்குவாதம், வெறுப்பையூட்டுவதாகவும், அரசியல் நோக்குடன் எழுப்பப்படுவதாகவும் இருக்கிறது" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

வெறிகொண்ட யானையின் நாச வேலை

மூன்று அகதிப் பெண்கள் கொல்லப்பட்டனர்

வெறிகொண்ட யானை ஒன்று, யானைப் பாகனைத் தாக்கிவிட்டு, அகதிகள் குடியிருப்பு இடத்திற்குச் சென்று, பலவீடுகளை மிதித்து நாசஞ் செய்ததுடன், மூன்று அகதிப் பெண்களையும் கொன்றுவிட்டதாம்.

மரங்களை வேரோடு சாய்க்க உபயோகப்படுத்தப்பட்டு வந்த அந்த யானை, தன்னைச் சங்கிலியில் பிணைக்க முயன்ற பாகனையும் மீறித் தாக்கியதாம்.

இச்சம்பவம், திக்பாய் எனும் இடத்திற்கு 5 மைல் தொலைவில் உள்ள பலிஜன் காடுகளில் குடியிருக்கும் அகதிகள் முகாமில் நடைபெற்றதாகத் தெரிகிறது.

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 2—4—'55 சனி

ஏன் அலட்சியப்படுத்தப்பட்டது?

[I]

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு — திராவிடம், வேண்டுமென்றே இந்தியப் பேரரசில் ஆதிக்கம் பெற்றுள்ள வட இந்தியத் தலைவர்களால் புறக்கணிக்கப்பட்டதென்று நாம் குற்றஞ்சாட்டுகிறோம். இந்தியப் பேரரசின் போக்கு, நமது குற்றச்சாட்டை உறுதி செய்வதாக இருக்கிறது. எனவே, நமது குற்றச்சாட்டிற்குத்துளியும் ஆதாரம் கிடையாது என ஒரேயடியாக மறுத்துவிட முடியாமல், குற்றச்சாட்டிற்கான உண்மை நிலையை அப்படியே ஒப்புக் கொண்டு, குற்றஞ் சொல்லும் நமது போக்கை மட்டும் நையாண்டி செய்கின்றன சில தேசிய ஏடுகள். அப்படிச் செய்வதின் மூலம், இந்தியப் பேரரசிற்கு இருப்பதாகச் சொல்லப்படும் நடுநிலைப் போக்கை நிலைநாட்டவும், அதே நேரத்தில் இந்தியப் பேரரசின்பால் தங்களுக்குள்ளதாக நடித்துக் கொண்டிருக்கும் விசுவாசத்தைப் பிறர் சந்தேகிக்க விடாமல் பாதுகாத்துக் கொள்ளவும் முனைந்துள்ள அவ்வேடுகளிடம் குறைபட்டுக் கொள்ள வேண்டிய அவசியம் நமக்கு இல்லை. அதற்கு மாறாக, அவ்வேடுகளும், நமது குரல் கொண்டு பேசும் காலம் கூடிய விரைவில் வர இருப்பதால், அத்தருணம் அவைகளை வரவேற்பதற்கான சூழ்நிலையை, இப்பொழுது முதற் கொண்டு உருவாக்குவதையே முக்கியப் பணியென நாம் கொள்ளுகிறோம்.

சேலம், திருச்சி முதலிய பகுதிகளில் இரும்புக் கனிப் பொருள் ஏராளமாக இருக்கிறது என்ற உண்மை அறிய வந்து அரை நூற்றாண்டுக்கு மேலாகிவிட்டது. காட்டுக் கரியின் துணைகொண்டு, ஏற்கனவே சேலத்து இரும்புக் கனிப் பொருளை, மக்களுக்குப் பயன்படும் பொருட்களாகவும் செய்யப்பட்டு இருக்கின்றன. வசதிக் குறைவாலும், ஆங்கிலேய அதிகாரிகளின் ஆர்வக் குறைவாலும் அந்தத் தொழில் முயற்சி அந்த அளவோடு நிறுத்தப்பட்டு விட்டது.

ஆங்கில அதிகாரிகளை, அதற்காகக் குறை சொல்லுவதிலும் பயனில்லை. அவர்களிடம், அதற்குமேல் நாம் எதிர்பார்ப்பதும் பொருளற்றதாகும்.

இந்தியத் துணைக் கண்டத்தின் முழுப் பகுதியும் தொழில் துறையில் முன்னேறி, தொழிலும், உயர்ந்த வாழ்க்கைத்தரமும் பெற்று மக்கள் அனைவரையும் வாழவைக்க வேண்டும் என்ற சிறந்த கோட்பாடு இந்தியப் பேரரசிற்குக் கண்டிப்பாக இருந்தாக வேண்டும். இப்பெரும் நிலையைத்தான் இந்தியப் பேரரசிடம் ஒவ்வொருவரும் எதிர்பார்ப்பர். இவ்வாறு எதிர்பார்க்க ஒவ்வொருவருக்கும் உரிமையும் இருக்கிறது. அவ்வுரிமையை திருப்திகரமாக நிறைவேற்றி வைக்கும் கடமையும் இந்தியப் பேரரசிற்கு இருக்கிறது.

ஆனால், இந்தியப் பேரரசு தனக்குரிய கடமையைச் செய்யத் தவறி இருக்கிறது. அதனிடம் தாங்கள் எதிர்பார்த்த நலத்தைப் பெறுமலும், வைத்திருந்த நம்பிக்கை நிறைவேறுமலும் ஏமாற்றம்—அதுவும் முழு அளவில்—பெற்றிருக்கின்றனர் தென்னாட்டு மக்கள்.

வடநாடு—தென்னாடு என்ற பேதபுத்தியற்றதாக இந்தியப் பேரரசு இருக்குமானால், சேலத்து இரும்புக் கனியைக் குறித்து என்ன செய்திருக்க வேண்டும்? அதைத் தோண்டி எடுத்து சுத்தப்படுத்தி, மக்களுக்குப் பயன்படும் எண்ணாறிய உலோகப் பொருட்களாக உருவாக்குவதற்கு, ஒரு உருக்குத் தொழிற்சாலையை நிர்மாணிப்பதை அல்லவா முதற்கண் செய்திருக்கவேண்டும்? சேலத்து இரும்புக் கனிக்கல்லவா, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் முதற் சலுகை காட்டி இருக்க வேண்டும்?

அதற்குப் பிறகல்லவா, ஒரிசா, மத்தியப் பிரதேசம் ஆகிய இரண்டு இடங்களில் மண்ணில் மறைந்து கிடக்கும் இரும்புக் கனியைத் தோண்டி எடுத்துத் தொழில்படுத்தத் தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதில் இந்தியப்பேரரசு கருத்தைச் செலுத்தி இருக்கவேண்டும்? ஆனால், இந்தியப் பேரரசு செய்துள்ளது என்ன? சேலத்தை அலட்சியப்படுத்திவிட்டு, ஒரிசாவிற்கும், மத்திய பிரதேசத்திற்கும் அல்லவா முதல் திட்டத்தில் முதல் ஏற்பாடு செய்திருக்கிறது?

இந்தியப் பேரரசின், இப்போக்கை ஓரவஞ்சனை என, நாம் கூறுகிறோம்; 'ஓரவஞ்சனை' என்ற சொல் கர்ணகடூரமாக இருக்கிறது என தேசிய ஏடுகள் கருதுவதாக இருந்தால், அந்தச் சொல்லுக்குப் பதில், இந்தியப் பேரரசின் பேத புத்தியை முழு அளவில் விளக்கும் வேறு ஒரு சொல்லை அவைகள் சிபாரிசு செய்யுமானால், அதை [illegible] ஏற்றுக்கொள்ள என்றும் தயாராகவே இருக்கிறோம். ஓரவஞ்சனை என்ற சொல்லுக்குப் பதில் வேறு சொல்லை பிரயோகிப்பதாலும், இந்தியப் பேரரசின் பேத புத்தியின் தன்மையை, அம்மாற்றுச் சொல்லால் மறைத்து விட முடிபதல்லவா? வெறும் சொல் மாற்றத்தினால் மட்டுமே மறைந்துவிடக் கூடாத நிலையில் அல்லவா, இந்தியப் பேரரசின் முதல் ஐந்தாண்டுத் திட்டமும், மேற்கொண்டுள்ள தொழில் துறை ஏற்பாடுகளும் இருக்கின்றன? நேருக்கு நேராகக் கண்டுவரும் நடைமுறை உண்மையை, சாதாரணசொல்லாலா பொய்யாக்கிவிட முடியும்?

இந்திய விவசாய அபிவிருத்தி

அமெரிக்காவில் உதவி

இந்தியாவின் விவசாய அபிவிருத்திக்காக அமெரிக்கா—இந்தியா ஆகியவற்றிடையே கையெழுத்திடப் பெற்ற 3 ஒப்பந்தங்களின்படி அமெரிக்கா, இப்போது ரூ. 71 லட்சம் கொடுத்து உதவும் என்று தெரியவருகிறது.

அவ்வாறு கிடைக்கப்பெறும் தொகை, விவசாய ஆராய்ச்சி, விவசாய, குடும்ப நிர்வாக விரிவுக்கான பயிற்சி, விவசாயத் தகவல், உற்பத்தி ஆகியவற்றில் பயிற்சி ஆகிய மூன்று திட்டங்களை நிறைவேற்றப் பயன்படுத்தப் படுமாம்.

இந்த மூன்று திட்டங்களுக்காகவும் ஏற்படுகிற செலவில் இந்திய சர்க்கார் தனது பங்காக ரூ. 157 லட்சம் ஏற்றுக்கொள்ளுமெனவும் தெரிகிறது.

தூங்காமல் தூங்கும் இந்து சட்டத் திருத்த மசோதா!

இந்து சட்டத் திருத்த மசோதாவின் பல்வேறு பகுதிகளும் நிறைவேற்றப்பட்டபின்னர், அவையாவையும் ஒன்ருகத் தொகுத்து, ஒரே மசோதாவாக்கிக் கொண்டுவர சர்க்கார் உத்தேசித்திருப்பதாக டில்லி மேல்சபையில் சட்ட மந்திரி படாஸ்கர் கூறியிருக்கிறார்.

துண்டு துண்டாகச் சட்டங்கள் இயற்றப்படுவதின் மூலம் மைனர், கார்டியன் உரிமை, ஜீவனாம்சம் போன்ற பரஸ்பர சம்மந்தம் கொண்ட பிரச்சினைகளில் முரண்பாடு காண ஏற்படுகிறது என்று சபை உறுப்பினர் ஒருவர் சுட்டிக் காட்டியதின் பேரிலேயே இம் மசோதா கொண்டுவரப்படும் என்று அவர் கூறினர்.

வரி வசூலிப்போரைத் தாக்கிய கம்யூனிஸ்டுகள் கைது

நெல்லை, மார்ச் 29—

மேலப்பாளையம் நகர சபை 'பில் கலெக்டர்' ஒருவரைத்தாக்கியதாக இரு கம்யூனிஸ்டுகள் உட்பட மூன்று பேர்கள் போலீசாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனராம்.

இதே குற்றத்திற்காக, கம்யூனிஸ்டு அனுதாபிகள் எனப்படும் மற்றும் 7 பேர்களை போலீசார் கைது செய்து ஜாமீனில் விடுதலை செய்தனர் என்றும் தெரியவருகிறது.

நெய், வெண்ணெய்பற்றிய பிரச்சினைகள்

பொது மக்களுக்கு நியாயமான விலையில் சுத்தமான நெய்யும், புது வெண்ணெயும் கிடைக்கும்படி எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும்; அவற்றை உற்பத்தி செய்யும் கிராம மக்களுக்குப் போதுமான கிரயமும் கிடைக்கும்படி செய்யவேண்டும்; சரியான இரசாயன பரிசோதனையாளர்கள், பரிசோதனை நிலையங்களுக்குக் கிடைக்காமற்போனால் அவ்வேலைகளைத் தொடர்ந்து நடத்திவர சர்க்கார், ஜூனியர் பரிசோதனையாளர்களை அதே செலவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

இவைபோன்ற மற்றும் சில தீர்மானங்கள் சென்ற திங்கட்கிழமையன்று கோவையில் நடைபெற்ற தென்னிந்திய நெய், வெண்ணெய் வியாபாரிகள் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

தீப்பெட்டி விற்பனை

கையால் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிகள் விற்பனையைக் கவனிக்க நிறுவனம் ஒன்றை அமைப்பது பற்றிய பிரச்சினை சர்க்கார் பரிசீலனையிலிருந்து வருவதாக அமைச்சர் பக்தவத்சலம் சென்னை சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

ஒன்றன்றி பல மனைவியுடையோர்

சர்க்கார் உத்தியோகம் பெற முடியாது!

ஐதராபாத், மார்ச் 31—

"ஒரு மனைவிக்கு மேல், அதிகமான மனைவியுடைய எவருக்கும், ஐதராபாத் சர்க்காரில் வேலை கிடைக்காது,"

என்று, அரசாங்கம் வெளியிட்டுள்ள குறிப்பொன்று கூறுகிறது.

'பப்ளிக் சர்வீஸ் கமிஷன்,' பிராந்திய வேலை தேடித் தரும் நிறுவனம் முதலியவை இந்த உத்தரவை, வேலைக்கு ஆள்பொறுக்கும் போது கண்டிப்பாக அமுல் நடத்துமாறு கோரப்பட்டுள்ளன என்று தெரிகிறது.

இதுபற்றி, பொய்யாக யாரேனும், உறுதிமொழி தந்து உத்தியோகம் பெற்றதாகத் தெரிந்தால், அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள் என்றும், இப்போது உத்தியோகத்திலிருப்பவர்கள் அரசாங்கத்தின் முன் அனுமதியின்றி, முதல் மனைவி உயிருடன் இருக்கும்போது இரண்டாம் திருமணம் செய்து கொள்ளக்கூடாதென்றும், ஏற்கனவே ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியுடையவர்கள் இதுபற்றி அரசாங்கத்திற்குத் தெரிவித்துவிட வேண்டும் என்றும் அந்தப் பத்திரிகைக் குறிப்பு கூறுகிறது.

தொழிலாளருக்கு வீடு கட்டித்தர...

சென்னை சர்க்கார் திட்டம்

இவ்வாண்டில்(1955-56)தொழிலாளருக்கென ரூ. 28,03,840 செலவில் வீடுகள் கட்டித்தருவதற்குச் சென்னை சர்க்கார் திட்டமிட்டு வருகிறது என்று சென்னை சட்டசபைக் கூட்டத்தில் அமைச்சர் பக்தவத்சலம் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

பிரிவினைக்கு முன்னும் பின்னும்

ஆந்திர மாநில பிரிவினைக்கு முன்னர் இருந்த சென்னை மாநில சர்க்கார் கெஜட் பதிவு பெருத சிப்பந்திகளுக்கான சம்பளத்திற்காக சென்ற 1953—54-ல் ரூபாய் 6,61,42,000 செலவாயிற்று என்றும், ஆந்திரப் பிரிவினைக்குப் பின்னர் இப்போது ஆகும் செலவு ரூ. 3,08,40,000 என்றும் தெரியவருகிறது.

அதுபோலவே, முன்னிருந்த சிப்பந்திகளின் எண்ணிக்கையான 1,78,743 பேர்களும் இப்போது 1,24,188 பேராகக் குறைந்துள்ளனர்.

இந்தியா — ஜெர்மனி வர்த்தக ஒப்பந்தம்

புதுடில்லி, எப். 1—

இந்தியாவுக்கும் ஜெர்மனிக்குமிடையே நேற்று வர்த்தக ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இவ்வொப்பந்தம் இன்று முதல் அமுல் செய்யப்படும் என்றும் தெரிகிறது.

இரு நாடுகளிலும் அமுலிலிருந்து வரும் இறக்குமதி, ஏற்றுமதி, நாணயச் செலாவணி ஆகியவற்றின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு இரு சர்க்கார்களும் தம்மிடையே வர்த்தகப் போக்குகளுக்கு இவ்வொப்பந்தம் வழி வகைகள் செய்யும் என்று கூறப்படுகிறது.

ரூ. 1,71,976 செலவில் உறவு இலாகா

கொழும்பு, மார்ச் 30—

இந்தியா—இலங்கை ஆகியவற்றிடையேயுள்ள ஒப்பந்த அமுலுக்காக உறவுஇலாகாஒன்றை ஏற்படுத்த, இலங்கை மக்கள் பிரதிநிதிகள் சபை, ரூ. 1,71,976 செலவில் உபமானியக் கோரிக்கை ஒன்றை நிறைவேற்றியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கிராம மக்களுக்கு விஞ்ஞான அறிவு

இந்தியப்பேரரசு புகட்டுமாம்

புதுடில்லி, மார்ச் 30—

அடுத்த நிதி ஆண்டில், இந்தியா முழுமையிலுமாக 40 விஞ்ஞான நிலையங்களை ஏற்படுத்த இந்திய சர்க்கார் முடிவெடுத்துள்ளதாக டெல்லி மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது போன்று சங்கிலித் தொடர் போல அமையும் விஞ்ஞான நிலையங்களின் மூலம் விஞ்ஞான அறிவையும் புதுப்புது கருத்துக்களையும் கிராமவாசிகளுக்குப் புகட்டுவதுதான் நோக்கமென்றும், எனவே, புதிது புதிதாக விஞ்ஞான நிலையங்கள் நிறுவப்படவேண்டியது மிக முக்கியமானதாகும் என்றும் அமைச்சர் மாளவியா கூறியிருக்கிறார்.

நான்கு வல்லரசு மாநாடு

அமெரிக்கா தயாராம்

"பின்னால் தவறான கருத்துக்களுக்கு இடம் தராத வகையில் முன்கூட்டியே திட்டம் வகுத்து நான்கு வல்லரசுகள் மாநாடு நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமானால், அம்மாநாட்டிற்கான ஏற்பாடுகளைச் செய்ய அமெரிக்கா தயார்," என்று அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர் தெரிவித்திருக்கிறார்.

ஊதியக் குழுவின் சிபாரிசுகள்

ஏற்றுக்கொள்ள இயலாதாம்!

சென்னை, மார்ச் 31—

உள்ளூர் நிர்வாகங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்குக் குறைந்த பட்சச் சம்பளமாக ரூ. 32½-யிலிருந்து ரூ. 40 ஆக நிர்ணயிக்க வேண்டுமென குறைந்த பட்ச ஊதியக் குழு சிபாரிசு செய்துள்ளதெனவும், ஆனால் அதை சர்க்கார் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் அமைச்சர் பக்தவத்சலம், சென்னை சட்டசபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

"தற்போது சர்க்கார் கொடுத்து வரும் சம்பளமான ரூ 18 அவர்களுக்குப் போதுமா?" என்று கேட்கப்பட்டபோது, அமைச்சர், சர்க்கார், அவர்களுக்குச் சம்பளமென ரூ 18 நிர்ணயிக்கவில்லை என்றும், கடைசி இரண்டு தரங்களுக்குக் கிராக்கிப்படி உட்பட ரூ. 25-ம், அதற்கு மேற்பட்ட 3 தரங்களுக்கும் ரூ. 40-ம் தரப்படுகிறது என்றும் கூறியிருக்கிறார்.

உலக நெருக்கடி நிலைமை

பண்டிதர் வருத்தம்

"தூரக் கிழக்கு நாடுகளிலும், தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் ஏற்பட்டுள்ள சில நிலைமைகளின் காரணமாக அங்குள்ள சூழ்நிலைகள் முழுதுமே மாற்றமடைந்துள்ளன."

"உடனடி யுத்த அபாயம் இல்லை என்றாலும், பொதுவாக அகில உலக நிலைமை கடுமையாகி, இந்நிலைமைக்குப் பரிகாரம் காண்பது கடினமாகிவிட்டது; உலகத்தை அனர்த்த விளைவுகளில் கொண்டுவிடும்படியான அளவுக்கு நிலைமையை மோசமாக்கும் சம்பவங்கள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன."

இவ்வாறு, இந்தியப் பிரதமர் நேரு மக்கள் சபையில் கூறியிருக்கிறார்.

அரசியல் சட்டத் திருத்தம்

கூட்டுக் குழுவின் யோசனைகள்

புதுடில்லி, மார்ச் 31—

சர்க்காரால் மேற்கொள்ளப்படும் நிலங்களுக்கு அனுமதிக்கும் நஷ்ட ஈட்டுத் தொகை போதாதென்று அரசியல் சட்டம் 31 (2) — 'எ' பிரிவு விதிப்பதை ஆட்சேபித்து எந்த நீதி மன்றத்திலும் தாவாச் செய்யக் கூடாதென்றும், ஆனால் இந்த மாறுதலால் ஆர்ஜித சட்டங்களை நீதிமன்றத்தில் ஆட்சேபிக்கலாமென்றும்—அதாவது ஆர்ஜித உரிமை மீறப்படுகிறது என்றோ அல்லது இஷ்டம்போல சொத்துக்களை வினியோகிக்கலாம் என்ற உரிமை மீறப்படுவதாகவோ கூறி, நீதிமன்றங்களில் அவற்றை ஆட்சேபிக்கலாமெனவும் அச்சட்டத்தின் பிரிவுக்கு கூட்டுக் குழு ஒன்று செய்துள்ள திருத்தத்தில் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

எண்ணிக்கையில் 'அவர்கள்!'

★

விபசாரம் :

"விபசாரத் தடைச் சட்டத்தின் கீழ் 1953-ம் ஆண்டில் 39 ஆண்கள் உட்பட 660 பெண்களும்; 1954-ம் ஆண்டில், 33 ஆண்கள் உட்பட 448 பெண்களும் தண்டிக்கப்பட்டனர்," என்று சட்டசபையில் நிதி மந்திரி அறிவித்தார்.

ஜேப்படி :

"1953—54-ம் ஆண்டுகளில், சென்னை நகர பஸ்களில் 273 பிரயாணிகளிடமிருந்து ஜேப்படி செய்யப்பட்டது; இதில், பஸ்களில் பிரயாணம் செய்யும்போது 145-ம், பஸ்களில் ஏற முயற்சித்த போது 128-ம் நடைபெற்றன; 182 திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன; ஜேப்படி காரணமாக ஒருவர் குத்தப்பட்டார்," என்றும், நிதி மந்திரி சட்டசபையில் அறிவித்தார்.

தென்னாற்காடு மாவட்டத்தில்

திருட்டு வழக்குகள்

சென்னை, மார்ச் 30—

தென்னாற்காடு மாவட்டத்தில் 1952—53, 1953—54-ம் ஆண்டுகளில் நடைபெற்ற திருட்டு சம்பவங்கள் குறித்து புள்ளி விவரங்கள் சட்ட சபையில் தரப்பட்டன.

1952—53-ம் ஆண்டில் 2,334 திருட்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன என்றும், அவற்றில் 1250 வழக்குகளில் சம்பந்தப்பட்ட திருடர்கள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டனர் என்றும், மொத்தம் ரூ. 1,67,646 பெறுமான சொத்துக்கள் இத்திருட்டுக்களில் சம்பந்தப்பட்டது என்றும்கூறப்பட்டது.

1953—54-ம் ஆண்டில், 2,137 திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றன என்றும், அவற்றில் 1,092 திருட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும், அவற்றில் ரூ. 1,28,962 பெறுமான சொத்துக்கள் திருடு போகப்பட்டவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட ஆற்காடு மாவட்டத்தில்

மதுவிலக்கு வழக்குகள்

வேலூர், மார்ச் 30—

கடந்த பிப்ரவரி மாதத்தில் மட்டும் வட ஆற்காடு மாவட்டத்தில் 1,312 மதுவிலக்கு வழக்குகள் 1305 பேர்கள் மீது தொடரப்பட்டன என்று தெரியவருகிறது.

கடந்த ஜனவரியில் 730 வழக்குகள் மட்டுமே பதிவாயினவாம்.

பிப்ரவரி மாதத்தில் பதிவான வழக்குகளின் எண்ணிக்கைதான் 1946-ம் ஆண்டிலிருந்து இன்று வரை எந்த ஒரு மாதத்திலும் பதிவான வழக்குகளின் எண்ணிக்கையைவிட பெரியதாகும் என்று கூறப்பட்டுள்ளது.

கழகச் செய்திகள்

★

ராயநல்லூர் தி. மு. கழக ஆண்டு விழா

26—3—55 மாலை 6 மணிக்கு ராயநல்லூர் தி. மு. கழக ஆண்டு விழாப் பொதுக் கூட்டம் தோழர் கே. ராமு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். வி. நடராசன், ஆர். பாலகுருசாமி, லா. ந. ராமலிங்கம், முத்தமிழன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

துறையூர் (நெல்லை மாவட்டம்) தி. மு. க. ஆரம்ப விழா அன்பளிப்பு

நெல்லை மாவட்டம், துறையூர் தி. மு. கழக ஆரம்ப விழா சிறப்புற நடைபெற்றது. அதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 5 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்

திருவெண்காடு தி. மு. க.

27—3—55 மாலை 8 மணியளவில், தோழர் டி. வி. சம்பத் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், அழகிரி படிப்பகத்தின் வளர்ச்சிக்காக உறுப்பினர்களிடமே சந்தா வசூலிப்பதெனவும், படிப்பகத்திற்குப் பத்திரிகைகள் பல தருவது என்றும், ஏப்ரல் திங்கள் இறுதிக்குள், கழக இரண்டாம் ஆண்டு விழாவை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சேலம் நகர கிளைக் கழகம்

24—3—55ல், நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், 10—10—54 முதல் 20—3—55 வரையுள்ள வரவு-செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன் 3—4—55ல், 'தீச்சுடர்' வளர்ச்சி நிதிக்காக சிறப்புச்சொற்பொழிவுக் கூட்டம் ஒன்று நடத்துவதெனவும், அக்கூட்டத்திற்கான அலுவல்களைக் கவனிக்க தோழர் இ. ஆர். கிருஷ்ணனுக்கு அதிகாரம் அளித்தும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

திருவள்ளுவர் திருநாள்

"தமிழினைப் பேசும் மக்கள் யாவரும் ஒன்றுபட்டு ஆண்டுதோறும் ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடும் திருநாளாகத் திருவள்ளுவர் திருநாளை நிலைத்திடச் செய்தல் தமிழ்ப் பெருங்குடி மக்களது பெருங்கடனாகும். தமிழ் இனத்தின் ஒற்றுமைக்காகவும், தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காகவும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும் இதனைத் தமிழன்பர்கள் யாவரும் செய்திடல் வேண்டும். பல்வேறு காரணங்களால் பிளவுபட்டுக் கிடந்த தமிழ் இனம், தமிழ் மறையினைத் தந்த திருவள்ளுவர் பெயரால் ஒன்றுபட்டு அவர்தம் திருநாளை ஒரு நாளிற் கொண்டாடுவதின் பெருமையால் அடையும் பெருமிதம் காண, இவ்வாண்டு ஜூன் திங்கள் 4-ந் தேதியன்று அத்திருநாளைக் கொண்டாடுமாறு கேட்டுக் கொள்கிறோம்." இவ்வாறு, கொழும்பு தமிழ் மறைக் கழகத்தார் வேண்டுகோள் ஒன்று விடுத்துள்ளனர்.

'இரத்தக் கண்ணீர்' — நாடகம்

தென்காசி தாலுகா, பாவூர்சத்திரம் நாடகக் கலை மன்றத்தாரால், ரேடியோ பார்க்கின் கீழ்ப்பக்கத்திலுள்ள வள்ளுவர் திடலில், 'இரத்தக் கண்ணீர்' நாடகம், தோழர் கே எஸ். வெள்ளச்சாமி தலைமையில் நடிக்கப்பெற்றது. தோழர் சி. இலக்குமணன், 'நாடகக் கலை' என்பது பற்றி விரிவுரையாற்றினார்.

நம் நாடு

தமிழகமெங்கும் ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள்

★

சென்னை 44-வது வட்டம்

20—3—55 காலை 10 மணிக்கு கழகப் பணி மனையில் தோழர் சி. குப்புசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கோ. இளவரசு, எம். இராசு, வி. குப்புசாமி ஆகியோர் பேசினர்.

சென்னை முத்தமிழ் மன்றம்

27—3—55 காலை 9 மணிக்கு. சென்னை, முத்தியாலுப்பேட்டை எண். 17 சாலை விநாயகர் கோவில் தெரு, முத்தமிழ் மன்றத்தில், தோழர் கா. வி. இராதாகிருட்டிணன் தலைமையில் தோழர்கள் வெ. கி. பார்த்தசாரதி, டி. கோவிந்தன், மு. மனோகரன், என். இராமதாஸ், மு. பெருமான், எஸ். மாரியப்பன், உத்தமன், நாகரத்தினம், தமிழ் தாசன் ஆகியோர் 'ஐந்தாண்டுத் திட்டம்' பற்றி பேசினர்.

சென்னை 8-வது வட்டம்

20—3—55 காலை 9 மணிக்கு, தோழர் கோவிந்தராசன் தலைமையிலும், தோழர் சி. ஆர். பாலசுந்தரம் முன்னிலையிலும் கண்டன ஊர்வலம் நடைபெற்றது.

கருவனூர்

29—3—55ல், பகுத்தறிவு மன்றம், தி மு. கழகம் ஆகியவைகளின் சார்பில், அண்ணா திடலில், தோழர் உ. பொ முத்திருளனார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் எம். எஸ். இராமசாமி, மதுரை எஸ். முத்து, மணிவண்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திருத்துறைப்பூண்டி

26—3—55-ல் இவ்வூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கள்ளக்குறிச்சி

29—3—55 மாலை 6 மணிக்கு, தோழர் க. வேலாயுதம் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கிக்கூறி, ஐந்தாண்டு திட்டத்தால் தென்னாடு புறக்கணிக்கப்படுவிதத்தை, புள்ளிவிவரங்களுடன் எடுத்துக்காட்டி நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்.

பரவை (மதுரை மாவட்டம்)

20—3—55ல், இங்கு மாபெரும் கண்டன ஊர்வலம் நடந்தது. பொதுமக்களுக்கு விளக்கம் தரும் முறையில் துண்டு விளம்பரமும் செய்யப்பட்டது.

தென்பாலைக் கிளை (தெ. ஆ. மாவட்டம்)

20—3—55-ல், தோழர் டி. பி ஆதிநாராயணன் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எருமப்பட்டி

27—3—55 மாலை 5 மணியளவில், தோழர் சி. இராமதாசன் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கொண்டயம்பட்டி (மதுரை மாவட்டம்)

22—3—55 இரவு 8½ மணிக்கு, தோழர் க. துரைச்சாமி தலைமையில், தென்னந்தோப்புத் திடலில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாராண்டஅள்ளி

28—3—55ல், தோழர் சிற்றுளி சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் என். வி நடராசன், எம். குப்புசாமி, சேலம் அன்புக்கரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

என். வி. நடராசன் சுற்றுப் பயண நிகழ்ச்சிகள்

★

ராசப்பய்யன்சாவடி :

19—3—55 மாலை 7 மணிக்கு ராசப்பய்யன்சாவடி தி. மு. கழக சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் மா. வீரய்யன் தலைமை தாங்கினார். தோழர்கள் மன்னை நாராயணசாமி, பி எஸ். பி. சாமி ஆகியோர் பேசிய பின் தோழர் என். வி. நடராசன் 'நாட்டுப் பிரிவினை ஏன்?' என்பது பற்றி பேசினார்.

திருச்சி :

20—3—55 மாலை 6 மணிக்கு டவுன்ஹால் திடலில் ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள் கூட்டம் எஸ். ஜி. கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஷெரீப், நெடுமாறன், என். எஸ் இளங்கோ, அன்பில் தர்மலிங்கம், எம். எஸ். மணி ஆகியோர் பேசிய பின், தோழர் என். வி. நடராசன், 'ஐந்தாண்டுத் திட்டத்தில் வடக்கும் - தெற்கும்' என்பது குறித்துப் பேசினார். பல கிளைகளின் சார்பில் கைத்தறி மாலைகள் அணிவிக்கப்பட்டன.

குறும்பேரி :

(வ ஆ) குறும்பேரி தி. மு. கழகச் சார்பில். மஜீத் பந்தலில், 21—3—55 இரவு 7-30 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது தோழர் கு மு. செங்கல்வராயன் தலைமை தாங்கினார். தோழர் என். வி. நடராசன், 'ஐந்தாண்டுத் திட்டமும், திராவிடமும்,' என்பது பற்றி பேசினார். கைத்தறி துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

சீர்காழி :

23—3—55 மாலை 6 மணிக்கு எஸ். ஆர். சி. டாக்கீஸ் திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது தோழர் ராமசாமி தலைமை தாங்கினார். தோழர் என். வி. நடராசன் 'ஐந்தாண்டுத் திட்டத்திலும் வடநாட்டவரின் சுரண்டல்,' என்பது குறித்துப் பேசினார். கழகச் செயலாளர் கைத்தறி துணியை அணிவித்தார்.

சந்தைப் புதுப்பாளையம்

24—3—55 மாலை 6 மணிக்கு பிள்ளையார் கோயில் தெரு, அழகிரி மேடையில், தி. மு கழகச் சார்பில், ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் போளூர் சுப்பிரமணியம், ப. உ. சண்முகம் பேசியபின் தோழர் என். வி. நடராசன் ஐந்தாண்டுத் திட்டத்தில் நேரு சர்க்கார் செய்துள்ள ஓரவஞ்சனையை விளக்கிப் பேசினார். மூவருக்கும் தி. மு கழகம், தி. மா. மு. கழகம் ஆகியவைகளால் வாழ்த்துரைகள் வழங்கப்பட்டு, கைத்தறி துணிகளும் அணிவிக்கப்பட்டன.

கல்லக்குடி

25—3—55 மாலை 6 மணிக்கு தி. மு கழகச் சார்பில், கடை வீதி அடுத்த திடலில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் தம்புச்சாமி தலைமை தாங்கினார். தோழர் செங்குட்டுவன் பேசியபின், தோழர் என். வி. நடராசன் ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள ஏகாதிபத்தியச் சுரண்டல் தன்மையை விளக்கியதோடு, கல்லக்குடி போராட்டத்தைக் குறித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் பதில் கூறினார்.

ராயநல்லூர்

ராயநல்லூர் தி. மு கழக முதலாவது ஆண்டு விழா 26—3—55 மாலை 4 மணிக்கு வ. உ. சி. திடலில், தோழர் கே. ராமு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எல். என். இராமலிங்கம், இரா. பாலகுருசாமி ஆகியோர் பேசிய பின், என். வி. நடராசன் நாட்டுப் பிரிவினையைக் குறித்தும், சமுதாயப் பணியின் அவசியத்தையும் விளக்கினார். கைத்தறி துணிகள் அணிவிக்கப்பட்டன.

துறையூர்—சிரம்பூர்

27—3—55 மாலை 6 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், குறிச்சி வீதி மாரியம்மன் கோயில் திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் மருதமுத்து, பி. ராமானுசம் ஆகியோர் பேசியபின், தோழர் என். வி. நடராசன் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதை விளக்கிப் பேசினார். கழகத் தோழர்களால் கைத்தறி துணிகள் அணிவிக்கப்பட்டன. அன்று மாலை 4 மணிக்கு துறையூர் தி. மு. க. கிளையின் தேர்தல் தோழர் என். வி. நடராசன் முன்னிலையில் நடைபெற்றது.

மாரண்டஅள்ளி

28—3—55 மாலை 6 மணிக்கு, தி மு. கழக சார்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. சேலம் சிற்றுளி சுப்பிரமணியம் தலைமை தாங்கி, வடநாட்டவரின் சுரண்டல் தன்மையை விளக்கினார். பின்னர் தோழர்கள் சேலம் அன்பக்கரசு, எம் குப்புசாமி ஆகியோர் பேசிய பின், தோழர் என். வி. நடராசன், 'ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு எந்தெந்த வகையில் தாழ்த்தப்பட்டு வருகிறது,' என்பதை விளக்கினார்.

திருமழிசை

30-3-55 மாலை 6-30 மணிக்கு தி. மு. கழகச் சார்பில், செங்கை கொண்டான் மண்டபத் தெருவில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் டி. கே. பொன்னான் தலைமை தாங்கினார். தோழர்கள் டி. சண்முகம், எம். எல். ஏ., வி. எஸ். கோவிந்தராசன் பேசியபின், தோழர் என். வி. நடராசன் 'ஐந்தாண்டுத் திட்டமும்—திராவிடமும்' என்பதைக் குறித்துப் பேசினார். சொற்பொழிவாளர்களுக்கு கைத்தறி துணிகள் அணிவிக்கப்பட்டன.

திருமணங்கள்

நீடாமங்கலம் தோழர் ஆர். செல்வக்குமாரவேலுக்கும் — தோழியர் செயலட்சுமி அம்மையாருக்கும் 30—3—55ல், திரு. க. இராமனுதன் தலைமையில் திருமணம் நடைபெற்றது. தோழர் டி. கே. சீனுவாசன் வாழ்த்துரை வழங்கினார் இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி பொறுப்பாளர்.

• • •

25—3—55 காலை 10 மணிக்கு 'முயற்சி' துணையாசிரியர் தோழர் இலெ கி. சுப்ரமணியம்-தோழியர் இராசாமணி வாழ்க்கை ஒப்பந்தம், மதுரையில் தோழர் அ. கி. பரந்தாமனார் தலைமையில் நடைபெற்றது. தோழர் க. அன்பழகன், எஸ். முத்து, ஆர். வி. நாராயணன், க. திருமாறன் ஆகியோர் சீர்திருத்தத் திருமணத்தின் சிறப்பு குறித்தும், மணமக்கள் வாழ்க்கை நடத்த வேண்டிய வழிமுறைகள் குறித்தும் சொற்பொழிவாற்றினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

• • •

25—3—55 காலை 9 மணிக்கு, சென்னை பெரம்பூர் பாரக்ஸ் கலியாண மேஸ்திரி தெருவில் தோழர் ஜி ஆயப்பன்—தோழியர் புனியாத்தம்மாள் திருமணம் என். எஸ். தங்கரூபன் தலைமையில் நடைபெற்றது. இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி பொறுப்பாளர்.

நீத்தார் நினைவு நாள்

10—3—55ல், சென்னை இராயப்பேட்டை தி.மு. கழகத் தோழர் கோ. இளவரசு அவர்களின் மாமனார் பி. குட்டியன் இயற்கை எய்தியமை குறித்து, 27—3—55 பகல் 12 மணியளவில், சென்னை திருவட்டீஸ்வரன்பேட்டை எண். 127 இல்லத்தில் தோழர் மு. புரட்சிமணி தலைமையில் சீர்திருத்த முறையில் நீத்தார் நினைவு நாள் கூட்டம் நடைபெற்றது.

பண்டித நேருவின் முதலைக்கண்ணீர்!

டில்லிஒப்பந்தம்எதிர்பார்த்தபலனைத் தரவில்லையாம்!

மக்கள் சபையில் ஒப்பம்

"இலங்கை—இந்தியர் பிரச்சினைக்கு ஒரு திட்டமான முடிவு காணவேண்டுமென்ற இந்தியாவின் நோக்கங்கள் கைகூடிவராது இருப்பது எனக்கு மனச்சோர்வை அளிக்கிறது; ஆயினும் இந்தியா இதுவரையும் பொறுமையுடனிருந்து, இலங்கையுடன் ஒத்துழைத்து, இலங்கையின் கஷ்டங்களையெல்லாம் நன்றாகப் புரிந்து கோண்டு, அவற்றைத் தவிர்ப்பதில் முயற்சி எடுத்துக் கோண்டுள்ளது; இவ்வாறு இருந்துங்கூட, டில்லி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவைச் சேர்ந்த மக்களில் பெரும்பாலானோர் இலங்கைக் குடிகளாகப் பதிவு செய்துகோள்ளப்படுவதில்லை; பெருவாரியான அவர்களுடைய குடியுரிமை கோரும் மனுக்கள் யாவும் நிராகரிக்கப்பட்டு வருகின்றன."

—இவ்வாறு இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர், டில்லி மக்கள் சபைக் கூட்டத்தின்போது குறிப்பிட்டிருக்கிறார்.

'எனினும் 'சுடு சொற்களால்' இனி எவ்விதப் பிரயோசனமுமில்லை; மாறாக அவைகள், பிரச்சினைகளை மேலும் கஷ்டமான தாக்கி விடும்,"

என்றும், பண்டிதர் கூறியிருக்கிறார்.

மேலும் அவர், முன்னர், ஏராள மானோர் இலங்கைக் குடிகளாகப் பதிவு செய்யப்படாமல், பெரும்பாலான மக்களது குடியுரிமை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்பதும், தற்போது எல்லா மனுக்களுமே நிராகரிக்கப்பட்டு வருவதின் மூலம் யாருமே இலங்கைக் குடிகளாக ஏற்கப்படுவதில்லை என்பதும் தெளிவாகிறது என்றும் குறிப்பிட்டுவிட்டு, "ஆனால், இதற்கு நேர்மாறான நடவடிக்கையாக, ஏராளமான மக்களை இந்தியர்களாகப் பதிவு செய்து கொள்வதில் இந்தியா பெரிதும் முன்னேறியிருக்கிறது" என்றும் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை தமிழர் பிரச்சினை

சென்னை முதலமைச்சருடன் இந்தியதூதுவர் ஆலோசனை

சென்னை, எப். 1—

இலங்கையில் தற்போது இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள பி. என். சக்ரவர்த்தி, இன்று, சென்னை சர்க்கார் காரியாலயத்தில், மாநில முதலமைச்சர் காமராசர், நிதி அமைச்சர் சுப்பிரமணியம் ஆகியோரைச் சந்தித்து, இலங்கையிலுள்ள தென்னாட்டவர் பிரச்சினை பற்றி ஆலோசனை நடத்தியிருக்கிறார் என்று தெரிகிறது.

செய்திப் படமா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளால் முடியவில்லையே? 'ரிகார்டுகள்' மூலம் ஆயிரக்கணக்கான மக்கள் அந்தப் பாடலைக் கேட்டுக் கொள்கிறார்களே?"

என்று, தொடர்ந்து பேசிய தோழர் சண்முகம் அவர்கள் குறிப்பிட்டார்.

இடையில் குறுக்கிட்டுப் பேசிய மந்திரி சுப்பிரமணியம் அவர்கள், "சென்சார் போர்டு என்பது மத்திய அரசாங்கம் நிறுவியுள்ள ஒன்றாகும்; அதற்கும் இந்த மசோதாவிற்கும் சம்பந்தமில்லை" என்று கூறினர்.

உடனே தோழர் சண்முகம் அவர்கள் "இந்த மாதிரி விஷயங்களை நிர்ணயம் செய்கிற அதிகாரம் கூட நமது மாநில அரசாங்கத்திடம் இல்லாமல், மாநிலத்திற்கு அப்பாற்பட்டவர்களிடம் இருக்கிறது என்பதை நாங்கள் தொடர்ந்து இங்கு சொல்லி வந்திருக்கிறோம்" என்று கூறினர்.

மந்திரி சுப்பிரமணியம் குறுக்கிட்டு, "மத்திய அரசாங்கம், இந்த மாநிலத்திற்கு அப்பாற்பட்டது என்று அங்கத்தினர் நினைப்பது தவறு," என்று கூறினர்.

★

திரைப் படங்களைக் கட்டுப்படுத்த!

சென்னை, எப். 1—

திரைப்படக் காட்சிகள் கட்டுப்பாடு மசோதா ஒன்றை சென்னை சட்டசபை நிறைவேற்றியிருக்கிறது. ஆட்சேபகரமான படக் காட்சிகளைத் தடை செய்ய மாவட்ட கலெக்டர்களுக்கும், சர்க்காருக்கும் அதிகாரம் தரும் மசோதாவின் பிரிவு ஒன்றிற்கு, அவர்களுக்கே அதனை புனர் பரிசீலனை செய்யவும் அதிகாரம் அளிக்கும் திருத்தம் ஒன்று சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

புத்துணர்வை ஒடுக்கப் புதிய பிரகடனம்!

அல்ஜீரியாவில் வருகிற 6 மாத காலத்துக்கு 'நெருக்கடி நிலைமை'ப் பிரகடனம் பிறப்பிப்பதற்கான மசோதா ஒன்றை, பிரெஞ்சுச்சட்ட சபை அங்கீகரித்துள்ளதாம்.

அல்ஜீரியா, வடக்கு ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு பிரெஞ்சுக் காலனி என்பதும், அங்கு, இப்போது தேசிய இயக்கம் வலுவாகி வருகிறது என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

வரி வசூலிக்க உதவும் மதிற்சுவர்

முன்னொரு காலத்தில் சூரத் நகரை எதிரிகளிடமிருந்தும்; கொலை, கொள்ளையரிடமிருந்தும் பாதுகாத்து வந்த நகர மதிற்சுவர் ஒன்று, இப்போது, வரி கொடாமல் தப்பித்து ஓடுபவர்கள், அவ்வாறு தப்பி ஓடிவிடாமல் மடக்கி, அவர்களிடமிருந்து வரி வசூலிக்க உதவுகிறதாம்!

சேருகிறார்கள்!

லண்டன், எப் 1—

இங்கிலாந்து சேர்ந்திருக்கிற துருக்கி—ஈராக் ஒப்பந்தத்தில் பாகிஸ்தான், பாரசீகம், அமெரிக்கா ஆகிய நாடுகளும் சேரக்கூடும் என்று பிரிட்டன் நம்புவதாக மக்கள் சபையில் ஈடன் தெரிவித்திருக்கிறார்.

அங்கீகரித்துவிட்டது

மேற்கு ஜெர்மனியை ஆயுதபாணியாக்கும் பாரிஸ் ஒப்பந்தத்தை, அமெரிக்க செனேட் அங்கீகரித்துவிட்டதாம்.

'சென்னை மாணவர்களிடம் ஆந்திர சர்க்கார் பகைமை உணர்வு கொள்ளவில்லை!'

'மாணவர்கள் துயரங்களை சென்னை அரசாங்கம் அறிந்தேயிருக்கிறது'

சட்ட சபையில் நிதி மந்திரி சுப்பிரமணியம் தகவல்

சென்னை, எப். 1—

"ஆந்திர மாநில சர்க்கார், அந்த மாநிலத்தைச் சேர்ந்த அனந்தப்பூர் எஞ்சினியரிங் கல்லூரியில் பயிலும் சென்னை மாநில மாணவர்களிடம் பகைமை உணர்வுடன்—துவேஷ மனப்பாங்குடன் நடந்து கொள்கிறது," என்று சட்டசபையில் கூறப்பட்டதை நிதி மந்திரி சுப்பிரமணியம் மறுத்தார்.

"அனந்தப்பூர் கல்லூரியில் பயிலும் மாணவர்கள், சில குறிப்பிட்ட சூழ்நிலைகளைக் காட்டி, தாங்கள் அங்கிருந்து விலகி சென்னை மாநில கல்லூரிகளில் படிக்க விரும்புவதாக சென்னைசர்க்காருக்குத் தேரிவித்துள்ளனர்; அந்தப் பிரச்சினை சென்னை சர்க்காரின் பரிசீலனையிலிருக்கிறது," என்றும் அவர் கூறியிருக்கிறார்

இப்பிரச்சினை பற்றி பல உப கேள்விகளும் கேட்கப்பட்டன.

நிதி மந்திரி சுப்பிரமணியம் அவற்றிற்குப் பதிலளிக்கையில், "அனந்தப்பூர்மாணவர்களின் கஷ்டங்களைக் குறித்து சர்க்கார் யோசித்து வருகிறது; சென்னை பல்கலைக் கழக 'சிண்டிகேட்'டும் இதுபற்றியதனது கருத்தைத் தெரிவித்துள்ளது; அந்த மாணவர்களை சென்னைக் கல்லூரிகளுக்கு மாற்றுவதில் உள்ள கஷ்டங்களையும், சிண்டிகேட் எடுத்துக் காட்டியுள்ளது," என்றும் நிதிமந்திரி பதிலளித்திருக்கிறார்.

"சென்னைக் கல்லூரிகளில் ஆந்திர மாணவர்கள் இருக்கிறார்களா?" என்று கேட்டபோது, "ஏராளமாக இருக்கிறார்கள்," என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

"ஆந்திராவில் உள்ள சென்னை மாணவர்கள் தங்களின் கஷ்டங்களை சர்க்காருக்குத் தெரிவித்துள்ளனர். சர்க்காரும் பிரச்சினைக்கான சரியான பரிகாரத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறது," என்றும் மந்திரி கூறியிருக்கிறார்

கொடுமையாகி விட்டதாம்!

சீனக் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்தில் உள்ள திபெத்திலிருந்து, மதக் கொடுமை தாங்காமல், சுமார் 200 குடும்பங்கள் வடபர்மாவிற்கு ஓடிவந்து விட்டதாக ரங்கூன் ஆங்கில தினசரி இதழ் ஒன்று அறிவித்துள்ளது.

திபெத்தில் மக்கள் வாழ்க்கை, 'பொறுத்துக்கொள்ள முடியாத' கஷ்டங்களுடையதாகி விட்டதாயும் தாங்கள் மத போதனைக்கு ஆளாக்கப்படுவதாயும் இனி தொடர்ந்து பர்மாவிலேயே குடியேறிவிட எண்ணியுள்ளதாயும், ஓடிவந்த அந்த 'அகதிகள்', அதிகாரிகளிடம் குறிப்பிட்டதாயும் அந்தப் பத்திரிகை கூறுகிறது.

சொற் பயிற்சிக் கூட்டம்

3—4—55 காலை 10 மணிக்கு சென்னை 30-வது வட்ட தி மு கழகக் கட்டிடத்தில், தோழர் வே. கரிகாலன் தலைமையில் 'குடும்பமும்—பொதுப் பணியும்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

பிறப்பு

தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரனார் அவர்களது அருமைச் செல்வன் காலஞ்சென்ற க. அருணாசலம் (ராமு) துணைவியார் அ. சரசுவதி அவர்கள் 31—3—55 வியாழக்கிழமை பகல் 3-30 மணியளவில் ஓர் ஆண் மகவுக்குத் தாயானார். தாயும் சேயும் நலம்.

லண்டனில் தமிழ்ச் சங்கம்

டாக்டர் சிதம்பரனாரின் அரிய முயற்சி

லண்டன், மார்ச் 29—

பல்கலைக் கழக நிர்வாகம் பற்றி அறிந்துகொள்வதற்காக, இங்கிலாந்தில் இரண்டுமாத சுற்றுப் பயணம் செய்த டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள் மீண்டும் தாயகம் புறப்பட்டுவிட்டார்.

அண்ணாமலை பல்கலைக் கழகத் தமிழ்த்துறை தலைவரான அவர், இரண்டு மாதகால சுற்றுப் பயணத்தில், 'ஆக்ஸ்போர்டு' 'கேம்பிரிட்ஜ்' 'மாஞ்செஸ்டர்' 'எடின்பர்க்' உள்ளிட்ட பல பல்கலைக் கழகங்களுக்கும் சென்று, அந்தக் கழகங்களின் துணை வேந்தர்கள், மற்றும் அதிகாரிகளைச் சந்தித்து பல்கலைக் கழக நிர்வாகம் குறித்து விவாதித்தறிந்து கொண்டுள்ளார் என்று தெரியவருகிறது.

லண்டனில் 'தமிழ்ச் சங்கம்' ஒன்றை நிறுவி அச்சங்கக் கூட்டத்திற்கும் அவர் தலைமை தாங்கினாராம்.

அந்த தமிழ்ச் சங்கத்தில், இந்தியா, மலேயா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளிலிருந்து வந்து லண்டனில் வசிக்கும் தமிழர்கள் எல்லோரும் பங்கு கொண்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

இலஞ்ச ஒழிப்பு

இலஞ்ச ஒழிப்பு சம்பந்தமான எல்லா நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்துவதற்காகவும், இலஞ்ச ஒழிப்புபற்றி மேலும் தங்கள் தங்கள் ஆலோசனைகளைத் தெரிவிக்கவும், இந்திய சர்க்கார் உள்நாட்டிலாகாவின் கீழ் தனிப்பட்ட நிறுவனம் ஒன்றை ஏற்படுத்த சர்க்கார் உத்தேசித்துள்ளதாக, அமைச்சர் தத்தர் டில்லி மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு தென்னிந்திய மாமிசம்

கொழும்பு நகர சபைக்கு திருச்சி நகர சபை எழுதியுள்ள கடிதம் ஒன்றில், "திருச்சி நகர சபை சுகாதார அதிகாரிகளின் மேற்பார்வையில்தான் ஆடுகள் வெட்டப்பட்டு மாமிசம் விற்பனைக்குத் தரப்படுகிறது என்பதால், அத்தகைய மாமிசம், மற்றும் கோழிகள், ஆடுகள் முதலியன விமான மூலம் பாதுகாப்புடன் அனுப்பப்பட முடியும்," என்று குறிப்பிடப்பட்டிருந்ததாம்.

திருச்சி நகர சபையின் கடிதப்படி, கொழும்பு நகர சபையினரும் அவ்வாறு மாமிசம் இறக்குமதி செய்து கொள்வதை ஏற்றுக்கொண்டு, அதற்கான அனுமதி பெற முற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்: அறிக்கை—6/55

பதிவுத் தாள் அனுப்புதல்

தேர்தல் நடத்திய கிளைக் கழகங்கள் பதிவுத் தாளை 5—4—55-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்துக்கு அனுப்பிவைத்துவிட வேண்டும். அதற்குப் பிறகு வரும் பதிவுத் தாள்கள் இப்பொழுது பதிவு செய்து கொள்ளப்படமாட்டா; அந்தக் கிளைகளின் மாவட்டப் பிரதிநிதிகளுக்குப் பிரதிநிதிச் சீட்டும் அனுப்பி வைக்கப்படமாட்டாது.

மாவட்டப் பிரதிநிதி

சிற்றூர்—பேரூர் (சிறிய-பெரிய பஞ்சாயத்து) கிளைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாவட்டப் பிரதிநிதியைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும். சில கிளைகள் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்திருக்கின்றன. அவர்களில் முதலில் காணப்படும் ஒருவருக்குத்தான் மாவட்டப் பிரதிநிதிச் சீட்டு தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும்.

"அறிவகம்" சென்னை.
31—3—55

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஜமுக்காள நெசவு கைத்தறி தொழிலா?

சட்ட சபையில் விளக்கம்

ஜமுக்காளத் தொழிலையும் கைத்தறி நெசவுத் தொழிலில் ஒன்றாகக் கருதி, அதன் விற்பனைக்கும் 'செஸ்' நிதியிலிருந்து தள்ளுபடி தரவேண்டுமென்று மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டுள்ளதாக அமைச்சர் பக்தவத்சலம் சென்னை சட்ட சபைக் கூட்டத்தில், உறுப்பினர் ஒருவரது கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிறார்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், நெசவாளர்கள் ஏற்படுத்திக் கொள்வதற்காக, தறி ஒன்றுக்கு ரூ. 80 வீதம் முதலீடாக ரூ 1,30,500 'செஸ்' நிதியிலிருந்து உதவப்பட்டிருக்கிறதென்றும், ஈரோடு வட்டம் பெரிய மேட்டுபாளையத்தில் உள்ள ஜமுக்காளக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றுக்கு 'செஸ்' நிதியில் இருந்து ரூ. 700 உதவப்பட்டதென்றும், ஆனால் பின்னர், 'ஜமுக்காளத் தொழில் கைத்தறித் தொழிலைச்சேர்ந்ததா—சேராததா?' என்பது பற்றிய முடிவு எதும் செய்யப்படாததால் அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதென்றும் மந்திரி மேலும் கூறினார்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

★

எப். 8: அருண்மொழித்தேவன் பொதுக்கூட்டம்
9: திருச்சி பொதுக்கூட்டம்
10: காலை: ஆம்பூர் தேர்தல்
மாலை: ஆம்பூர் பொதுக்கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம்.ஏ